கள் எல்லாம் விடுதலைப் புலிகள் அல்ல. அதற்காக விடுதலைப் புலிகள் இங்கே உலவுகின்றார்கள் என்றும் கூறமுடியாது. ஏனென்றால் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் வந்து வாழ வேண்டிய அவசியம் இப்போது இல்லை அவர்களுக்கு. காரணம் அவர்களுக்கு தமிழ் ஈழத்திலே இருக்கின்ற பணி நிரம்ப இருக்கின்ற காரணத்தால் அவர்கள் வர வேண்டிய அவசியமில்லை. அண்மையில் கூட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பயங்கரமான ஆயுதங்களோடு 'டக்ளஸ்' என்பவருடைய தலைமையிலுள்ள இன்னொரு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களில் சில பேர் கவலைப்படாமல் விடுதலைப் புலிகளைப் பற்றி மாத்திரம் கவலைப்பட்டுக் கொண்டு இருப்பது வேதனை அளிக்கக்கூடியது.

4. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்குள் சமூக விரோதிகளின் செயல்களால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் எல்லைக்குள் சமூக விரோதிகள் செய்கின்ற தீய செயல்களினால் ஏற்படுகின்ற சுகாதாரப் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நான் கீழ்க்கண்ட அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னைப் பெருநகரில் கட்டாய இலவசக் கல்வி வசதியளிக்கும் பொருட்டு 300 தொடக்க நடுநிலைப்பள்ளிகளையும் உயர்நிலைக் கல்வி வசதியளிக்க 22 உயர்நிலைப்பள்ளிகளையும் மேல்நிலைக் கல்வி வசதி அளிக்க 13 மேல்நிலைப்பள்ளிகளையும் மாநகராட்சி நடத்திவருகிறது. அநேகமாக எல்லாப் பள்ளிகளிலும் அடிப்படை வசதிகள் உள்ளன. சில பள்ளிகளில் உள்ள கழிப்பறையை சுற்றுப்புறத்திலுள்ள பொது மக்கள் பயன்படுத்துவதால் பாதிக்கப்பட்டு, மாணவர்கள் பயன்படுத்த முடியாமல் மீண்டும் மீண்டும் பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன. மேலும் சில பள்ளிகளில் சுற்றுப்புறச் சுவர்கள் இல்லாததால் பள்ளி வளாகத்தில் அல்லது பள்ளிக்கு அருகில் மலம், சிறுநீர் கழித்தல், கள்ளச் சாராயம் விற்பனை, பள்ளிப்

பொருட்களை களவாடுதல் போன்ற தீய செயல்கள் நடை பெறுவதாக அறியப்படுகிறது. அனைத்து மேல்நிலை மற்றும் உயர் நிலை, துவக்க, நடுநிலைப் பள்ளிகளிலும் பணிபுரியும் இரவுக் காவலர்கள் சமூக விரோதிகள் செய்யும் தீய செயல்களையும் திருட்டையும் தடுக்கும் வண்ணம் செயலாற்றுகின்றனர். இருப் பினும் பள்ளியின் சுற்றுபுறத்திலுள்ள மக்கள் தங்கள் வசதிக்காக பலவிதமான தீயசெயல்கள் செய்வதில் ஈடுபடுகின்றனர். மலம், சிறுநீர் கழித்தல் போன்ற அசுத்தங்கள் பள்ளிகளில் பணியாற்றும் பணியாளர்கள் அல்லது மாநகராட்சி துப்புரவு பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யப்படுகிறது. கள்ளச் சாராய விற்பனை களை அப்பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர்களோ, ஆசிரியர்களோ காவலர்களுக்கு நேரில் தெரிவித்தாலும் காவலர் கள் வருமுன் அல்லது அவர்களைக் கண்டதும் விற்பனையாளர் கள் மறைந்து விடுகின்றனர். இத்தகைய தீய செயல்கள் நடைபெறுவதைத் தடுக்க பள்ளித் தலைமையாசிரியர்கள் தவிர மாநகராட்சி ஆணையாளரும் காவல் துறை தலைமை அதிகாரி களுக்கு புகார் செய்து உரிய நடவடிக்கை தொடர்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

திரு. செங்கைசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக சென்னை மாநகராட்சியி னுடைய பள்ளிகளில் சுற்றுச் சுவர்கள், கதவுகள் பாதிக்கப்பட் டிருப்பதாலே, போதுமான நிதி ஒதுக்கி அவை பராமரிக்கப் படாததாலே பொது மக்கள் பள்ளிகளிலே அவற்றின் வளாகங் களிலே சென்று, சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்துவதால் அதனைப் போக்கி, போதுமான நிதி ஒதுக்கி வாயில் கதவுகளையும் மதிற் சுவர்களையும் கட்டுவதற்கும், மாணவர்கள் நல்ல சூழ்நிலையில் படிப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

10-10 மணி

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 24-ஆம் தேதி இந்த அவையில் மானியக்கோரிக்கைமீது நான் அளித்த பதிலுரையில் மாநகராட்சி யில் இருக்கின்ற பள்ளிகள் மிகவும் சீர்கெட்டிருக்கிறது என்பதை விளக்கி, கூரை வீடுகள் கூட பள்ளிகளாக இருக்கின்றன என் பதைத் தெரிவித்து. அவைகள் அனைத்தும் பழுது பார்க்க வேண்டும் என்று நாங்கள் விரும்பி அதற்கான ஆணை பிறப்பிக்கப் படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் எல்லாப் பள்ளிகளும் என்று சொல்லுவது கூடத் தவறு, ஏறத்தாழ 7 பள்ளிகள்தான் இப்படிப்பட்ட நிலையில் சமூகவிரோதிகள் சிலபேர் அதிலே போய் நடவடிக்கைகளில் ஈடுபடுகிற வாய்ப்பு இருக்கிறது. அது பற்றி அடிக்கடி காவல் துறைக்கு தகவல் தெரிவிக் கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொண்ட இந்த முயற்சியால் அந்த 7 பள்ளிகளிலும் சற்று தயவுசெய்து முயற்சி எடுத்துக்கொண்டு காவலர்கள் உதவி

யாக இருந்தும் அப்படிப்பட்ட சமூகவிரோதச் செயல்பாடுகளில் ஈடுபடுவதை கண்டுபிடிக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நிச்சயமாக இந்தப் பள்ளிகள் கதவு இல்லாத பள்ளிகள் வாசலுக்கு கதவு இல்லாத பள்ளிகள் அவைகள் அனைத்தும் இந்த ஆண்டுக்குள் சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கூறியுள்ளது போல் சமூக விரோதிகள் மாநகராட்சிப் பள்ளிகளில் கள்ளச்சாராயம் விற்பது தீய செயல்களில் ஈடுபடுவது போன்ற முறைகேடுகளைக் களைய போதுமான காவலர்கள் நியமித்து தீயச் செயல்களைத் தடுக்க அரசு முன்னுரிமை தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதவுகள் இல்லாத பள்ளிகளில் கதவுகள் போடும் பணியை நாம் ஆரம்பித்து இருக்கிறோம். அதோடு கூட ஒரு காவலருக்கு மேல் ஒரு பள்ளிக்கு அதிகமாக காவலர்கள் போடுவதற்கு நிதி வசதி இடம்தராது. அதுமுறையும் அல்ல. கூடுமானவரை அவ்வப்போது கண்காணிப்பதற்கு அங்கே இருக்கிற தலைமை ஆசிரியர், மாநகராட்சியில் உள்ள அலுவலர்கள் உடனடியாகத் தகவல்களை காவல் துறைக்குத் தெரிவிக்குமாறு யோசனை கூறப்பட்டுள்ளது.

(ஆ) நீலகிரி மாவட்டம் கூடலூரில் ஹெலன் குடிநீர்த் திட்டப்பணிகள் முடிவுறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ரமணி மற்றும் கோ. வீரையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நீலகிரி மாவட்டம் கூடலூர் பேரூராட்சியின் ஹெலன் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவடையாமல் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :